# ஆண்டின் பொதுக்காலம் 4 ஆம் வாரம்

## முதலாவது திருவழிபாடு ஆண்டு

### இன்றைய வாசகங்கள்:

இறைவாக்கினர் செப்பனியா நூலிலிருந்து வாசகம். 2:3, 3:12-13,

பல்லவி: அனைத்துலகோரே! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்!.

திருத்தூதர் பவுல்கொரிந்தியருக்கு எழுதிய முதல்

திருமுகத்திலிருந்து வாசகம் 1:26-31,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 5:1-12)

### திருப்பலி முன்னுரை:

இறை இயேசுவில் அன்புநிறை சகோதரர்களே சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் இயேசுவின் பெயரில் என் அன்பையும் வாழ்த்தையும் உரித்தாக்குகிறேன். ஆண்டின் பொதுக்காலம் 4 ஆம் வாரத்திலிருக்கும் நாம் இன்று சிறப்பாக இயேசுவின் பணியைத் தொடர்ந்தாற்ற அழைக்கப்படுகிறோம். இந்த சிறப்பு நிலையைப் பெற இன்றைய இறை வாக்குகளின் ஊடாக நம் சிந்தனைகளை செலுத்த விழைவோம்.

அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கின்றவரும்: பொல்லாரின் வழிமுறைகளைக் கவிழ்த்து விடுகின்றவருமான நம் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம். இன்றைய நாளில் மீண்டும் நமக்கு நம்பிக்கையூட்டி, நிறைவாழ்வுக்குள் நம்மை அழைத்துச் செல்கிறார் இறைவன். ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றார்: பசித்திருப்போர்க்கு உணவளிக்கின்றார்: சிறைப்பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றார். பார்வையற்றோரின் கண்களைத் திறக்கின்றார்: தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார்: என்பதே அவர் தருகின்ற நிறைவாழ்வாகும். ஆகவே நாம் அனைவரும் இறைவன் காட்டும் வழியில் நடக்க வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. எல்லாத் தலைமுறைகளுக்கும் ஆட்சி செய்யும் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் கனிவுடையோராகவும், நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோரகவும், இரக்கமுடையோராகவும், தூய உள்ளத்தினராயும், அமைதியை ஏற்படுத்துவோராயும் பணியாற்றுவதற்கு வேண்டிய வல்லமையை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. பார்வையற்றோரின் கண்களைத் திறக்கும் தந்தையே இறைவா!**

எம்மிடம் உள்ள ஆன்மிகத் தெளிவின்னையைப் போக்கி. கனிவுடையோராகவும், நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோரகவும், இரக்கமுடையோராகவும், தூய உள்ளத்தினராயும், அமைதியை ஏற்படுத்துவோராயும நாம் வாழ எமக்கு ஆற்றல் அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. உம் திருமலையிலிருந்து எமக்குப் பதிலளிக்கும் எம் இறைவா!**

எங்கள் குடும்பங்களின் தேவைகளை அறிந்து எம் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்தருளும். நாங்கள் உம்மிடம் வேண்டிக்கேட்பதைவிட மேலானவற்றைப் பொழிந்து எம் குடும்பங்களில் அன்பும் நட்பும் மலர அனைவரும் ஒன்றிணைந்துச் செயல்பட வேண்டிய ஞானத்தையும் விவேகத்தையும் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**4. எம் வலிமைமிகு கற்பாறையும் புகலிடமுமான எம் இறைவா!**

இந்த விழாக்காலங்களில் இயற்கையின் ஏமாற்றத்தால் நொந்து நூலாகிப்போன எம் விவசாயத் தொழிளாலர்களைக் கண்ணேக்கிப்பாரும். அவலங்கள் நீங்கி வளமைப் பெற்ற அவர்களின் வாழவாதரங்கள் மாறிட வேண்டிய வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**5. எம் வாழ்க்கையில் ஒவ்வொருகட்டத்திலும் எம்மைக் காக்கும் இறைவா!**

எம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் உள்ள நலிந்தோரையும், நோயாளிகளையும், கைவிடப்பட்டோர்களையும், நாடோடிகளாய் வாழும் எளியோரையும் பேணிக்காத்து அவர்கள் வாழ்வு உயர நாங்கள் அனைவரும் உழைக்க வேண்டிய நல்ல மனதினைத் தருமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**6. நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கும் தந்தையே இறைவா!**

பல்வேறு விதமான நோய்களால் பாதிக்கப்பட்டு வேதனையோடும், கவலையோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களைக் குணப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.